## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்ட குறித்தசில சிகரெட்டுக்களுக்கு அளிக்கப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியை வரையறுப்பதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கான ஏற்பாடு களைச் செய்வதாகும் :-

(அ) ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்ட சிகரெட்டுக்களுக்கு அளிக்கப்பட்ட விலக்களிப்பு காலப்பகுதியை வரையறுத்தல் ;

(ஆ) ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக்கற்கள் தொடர்பாக ஏலவேயுள்ள விலக்களிப்புக்கள் பற்றிய கட்டளைக்கற்களை மீளாய்வு செய்தல் ;

(இ) குறித்தசில புதிய பொருட்களின் இறக்குமதிக்கு விலக்களிப்பை நீடித்தல்; அத்துடன்

(ஈ) குறித்தசில சேவைகளுக்கு அளிக்கப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியை வரையறுத்தல்.

